விலை ரூபா 1–25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 19 துல்ஹஜ்தா 6 இதழ் 132

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-7-1987

ஆனையிறவு தடைமுகாமிலிருந்து

# தனியார் பஸ்ஸில் தப்பிச்சென்ற இரு இராணுவத்தினர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தப்பி பிரயாணிகள் பஸ்ஸில் ஏறிச்சென்ற இரண்டு இராணுவத்தினர் மாங்குளத்தில் வைத்து இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பிரயாணிகளை ஏற்றிச்சென்ற தனியார் சொகுசு பஸ்ஸில் சோதனையின் பின் இந்த இரண்டு இராணுவத்தினரும் பிரயாணிகள் போல் ஆனையிறவு தடை முகாமில் ஏறிக்கொண்டனராம்.

பஸ் புறப்பட்டு ஆனையிற வைத்தாண்டிச் சென்றபின் இராணுவத்தினர் தப்பிச் சென்றமை முகாம் உயரதிகாரி

(5ம் பக்கம் பார்க்க)

இலங்கை வான்பிராந்தியத்துள்

## இந்திய விமான ஊடுருவல் விசாரணை நடத்த முடிவு

லண்டன், ஜூலை, 2

இலங்கை வான் பிரதேசத்துள் இந்திய விமானங்கள் ஊடுருவி உணவுப்பொருள் போட்டது தொடர்பான விசாரணை

(5ம் பக்கம் பார்க்க)

★ தமிழீழக் கோரிக்கைக்கு மாற்று யோசனை எதனையும்

# தமிழ் மக்கள் அங்கீகரித்தால் நாம் அதனை ஏற்போம்

\- சிவா

(லண்டன்)

"தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணியே முதலில் முன்வைத்தது. ஆனல் தமிழ் ஈழத்திற்கு மாற்றுயோசனையாக தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் எதனையும இலங்கை முன்வைக்குமானல், நாம் அதனை மக்கள் முன்வைத்து அவர்கள் அதை அங்கீகரிப்பார்களேயானல் நாமும் அதன் பிரகாரம் செயற்படத் தயாராகவுள்ளோம்".

நேற்றுமுன்தினம் பி. பி ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. எம்.சிவசிதம்பரம் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் இலங்கை அரசினல் தமிழ் பிரதேசங்களில் இடைத் தேர்தல் நடத்துவது பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் 'தமிழ் மக்களது உரிமைகள் முற்று முழுதாகக் கிடைக்கும்வரை நாம் அத்தேர்தலில் பங்கு கொள்ள மாட்டோம். என்று கூறியதுடன் உலகத்தையும் உலக மக்களையும் ஏமாற்றுவதற்காகஅதிபர் ஜெவவர்த்தன மேற்கொண்டுள்ள தந்திரோபாயமே இந்த இடைத் தேர்தல் என்றும் கூறினர்.

இந்திய அரசு யாழ். குடாநாட்டுமக்களுக்கு விமான மூலம் உணவு வழங்கியது குறித்து கேட்கப்பட்ட இன்னுமொரு கேள்விக்கு பதிலளித்த அவர் 'பசியால் வாடும் மக்களுக்கு உணவு கொடுப்பதை எந்தச் சட்டமும் மறுக்க முடியாது அப்படி மறுத்தால் அது சட்டமல்ல. எரிற்றியா, எதியோப்பியா ஆகியநாடுகளுக்கு உாயநேரத்

(5-ம் பககம் பார்க்க)

## 'ஷெல்' தாக்குதல் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,வெள்ளி

வளலாய் மினி இராணுவ முகாமிலிருந்து கதிரிப்பாய் பகுதியில்நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினல இருவர் காயமடைந்துள்ளனர்

(5-ம் பககம் பார்க்க)

வளலாய் மினி முகாமிலிருந்து

## இரு தடவை வெளியேறிய படையினருடன் புலிகள் கடும்சமர்

### இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கியது

யாழ்ப்பாணம். திங்கள்

வளலாய் மினிமுகாமிலிருந்துவெளியேறியநூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினரை எதிர்த்து தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடுத்ததையடுத்து பலத்த இழப்புகளுடன் இராணுவத்தினர் முகாம் திரும்பினர்.

நேற்று நண்பகல் ஒருமணிக்கும் மாலை 5 மணிக்குமாக இரண்டு தடவைகள் வளலாய் மினி முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுநண்பகல் ஒருமணிக்கு வெளியேவர முயற்சித்த இரா

(5 ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சென்ற யாழ் லொறிகள் "கம்உதாவ" தேவைகளுக்கு திசைதிருப்பப்பட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி,

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவருவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற சுமார் 50லொறிகள் கதிர்காமத்தில் நடைபெற்றுவரும் 'கம் உதாவ -87' நிகழ்சசிகளின் தேவைக்காக எடுத்துச்செல்லப்பட்டதாக அறியப்படுகிறது

இச்சம்பவம்பற்றி மேலும்

(5ம் பக்ஷம் பார்க்க)

## வின்சென்ற் பெரேரா பதவி துறந்தார்

[கொழும்பு]

கொழும்பு வடக்கு எம். பி. யும், பாராளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு. வின்சென்ற் பெரேரா தமது மந்திரிப்பதவி எம். பி பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இவர் ஐ. தே. க.வின் நீண்டகால அங்கத்தவராவார். இவரது ராஜினாமாவை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனமும் ஊர்ஜிதம் செய்து செய்திவெளியிட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்கு ஐ தே. க. தயாரித்த வேட்பாளர் பட்டியலில் இவாது ஆதரவாளர்களின் பெயர்கள் இடம்பெறாததே ராஜினாமாவுக்கான காரணமெனத் தெரியவந்துள்ளது. எனினும் அவரது ராஜினமா தொடர்பான காரணங்கள் எதுவும் அரசாங்கத்தினல் வெளியிடப்படவில்லை.

## 'சண்', 'ஐலண்ட்' பத்திரிகைகள் விசமத்தனமான பிரசாரம் ஜனதிபதிக்கு டிக்ஸிற் புகார்

[கொழும்பு]

யாழ். குடாநாட்டில் இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மேற்கொண்டுவரும் மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண', 'ஐலண்ட்' பத்திரிகைகள விசமத்தனமான பிரசாரத்திலீடுபட்டு வருவதாக இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே என். டிச்ஸிற் ஜனதிபதி ஜெயவர்த்தனவிறகு புகார் செய்துளளார்.

ஜனதிபதி ஜெயவர்த்தனவை நேற்று முன்தினம் சந்தித்தபோது திரு டிக்ஸிற் இப்

(5ம் பக்கம் பார்க்க)

பாக் அச்சுறுத்தலை எதிர்நோக்க

## இந்தியா 'எவாக்ஸ்' விமானம் தயாரிக்கிறது

(புதுடில்லி)

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 'எவாக்ஸ்' விமானங்களை வழங்க முன்வந்துள்ளதையடுத்து இந்தியாஎவாக்ஸ் விமானதயாரிப்பில் இறங்கியுள்ளது.

இத்தயாரிப்பு நடவடிக்கையில இந்தியபாதுகாப்புஅமைச்சின் மின் அணு ராடார் வளர்ச்சிஅமைபபு செயற்பட்டு வருவதாகவும் இதற்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைப்பின் தலைவர் திரு. ராஜேந்திரா தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து பார்த்தசாரதி - தமிழக அரசு தலைமைச்செயலா பேச்சு

(சென்னை)

இந்திய வெளியுறவு இலாகா கூட்டுச் செயலாளர் தரு ஜி பார்த்தசாரதி இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து தமிழக அரசு தலைமைச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சென்னையில் நேற்று சுமார் அரை மணித்தியாலம் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

மண்டபம் மற்றும் தமிழகத்தின் பலபகுதிகளிலும் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் இந்திய மத்திய அரசின் மூலம் யாழ் குடாநாட்டுககு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களின் விநியோகப குறித்தும் இப்பேச்சுவார்த்தைகளின்போது முக்கியமாக ஆராயப்பட்டது. (ரா)

# இந்தியசெஞ்சிலுவையினரின் நடவடிக்கைகள் ஆராயப்படும்

## விசா நீடிப்பும் இல்லை

(நமது நிருபர்)

இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் பகுதியில் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படும் விடயங்கள் குறித்து முழுமையாக ஆராயப்படவிருப்பதாக வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி திரு. கௌத்தமதாஸ கூறியிருக்கிறர்.

தற்பொழுது கொழும்பு செஞ்சிலுவைச் சங்க உறுப்பினாகள் மூவர் யாழ்ப்பாணத்திலிருப்பதாகவும் இந்திய

[5ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய வயலின், Love Birds [கூட்டுடன்] உட்பட பல் வேறு வீட்டுப் பாவனைப் பொருள்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. கே. கந்தசாமி, 'யோகலக்சுமி', அராலி வடக்கு அராலி. சி-9665

பண்டத்தரிப்பு பட்டின சபை எல்லைக்குள் சண்டிலிப்பாய் வீதியில் முல்லையடிக்கு அண்மையில் இரண்டு பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு:வ சிவக்கொழுந்து, சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. சி-9664

புத்தம்புதிய வீடியோ டெக் (HRS 10E கமெரா, (VK4003) லைற் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சிவஞானரட்ணம் (சிறுப்பர்) சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். சி-9602

## வகுப்புக்கள்

1988, G.C.E. O/L ஆங்கிலப் பரீட்சை. புதிய பாடத்திட்டம். Year 8, 9, 10 ஆங்கிலப் பாடப் புத்தகங்களின் அடிப்படையில் வகுப்புக்கள் ஆரம்பம். தொடர்புகொள்க: S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி-9522)

## பயிற்சி

Computer Porgramming, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங், வயறிங், றீவைண்டிங் பயிற்சிகள் இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம்: 05-07-87 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வேக் கடவை அருகாமை), யாழ்ப்பாணம். கிளை யாழ். வீதி. (பாமஸி அருகாமை), மானிப்பாய். சி-9667

## பிறந்தநாள் வாழ்த்து



**விஜேஜேந்திரன் கஜேந்திரன்**

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த விஜஜேந்திரன் சாரதா தேவி தம்பதியரின் செல்வப் புதல்வன் கஜேந்திரன் [கஜேன்] தனது முதலாவது பிறந்தநாளை இன்று [3-7-87] பிரான்சில் தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மானிப்பாயைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மாவும், கனடா விக்கிச் சித்தா, சாவித்திரி சித்தி, விக்கிமாமா, விஜி மாமி, சன்மாமா, விஜிச் சித்தி, உமா அக்கா. முருகவேல் மாமா ஆகியோர் இவரை ஐங்கரன், சண்முகன் அருளால் ஆயகலைகளையும் கற்று, நீடுழி காலம் வாழ்க என்று வாழ்த்துகின்றனர். (சி-9666)

## சேவை

திறமையானமுறையில் படச்சுருள்கள் கழுவியும், பிரதிகளாக்கியும் பெற்றுக் கொள்ள கி. வீ. போட்டோ, ஸ்டேசன் சந்தி, யாழ்ப்பாணம். சி-9594

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற சாவகச்சேரி, கண்டி வீதி, கந்தையா சிதம்பரப்பிள்ளையின் மரணசாதனமில்லா சொத்து விடயமாக,

காலஞ்சென்றவர் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் நாகம்மா, 431, கண்டி வீதி, சாவகச்சேரி.

மனுதார்

இல. 248/தத்துவம்

எதிராக

1. வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை கருணனந்தம், கண்டி வீதி, சாவகச்சேரி.
2. சிதம்பரப்பிள்ளை சிவஞானம்.

பிரதிவாதிகள்

மேற்குறிப்பிட்ட மரணச் சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாதென்பதற்கு அக்கறையுள்ள எவரும் தகுந்த காரணம் ஏதுமிருப்பின் 1987ம் ஆண்டு ஆனி மாதம் 22ம் திகதி தெரிபட்டு அதற்கான காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1987ம் ஆண்டு வைகாசி மாதம் 15ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

வரைவு
மனுதாரின் சட்டத்தரணி
வீ. பொ. கார்த்திகேசு
ஜே.பி. யூ.எம்.

காரணம் காட்டும் திகதி 3-8-87 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆ. குணநாயகம்,
பதிவாளர்

[சி-9567]

# இராணுவத்தால் தாக்கப்பட்டபின் விடுதலையான இளைஞர்கள் இருவர் மீண்டும் கைது

(திருமலை நிருபர்)

கந்தளாயில் இராணுவத்தால் கைதாகி கடுமையாகத் தாக்கப்பட்ட இளைஞர்கள் இருவர் மீண்டும் ஆஸ்பத்திரியிலிருந்து இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 18ம் திகதி இளைஞர்கள் இராமலிங்கம் ஆறுமுகம் (30வயது) காத்தமுத்து தங்கராசா (22 வயது) ஆகிய இருவரும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர். கடுமையாகத் தாக்கப்பட்ட இவர்கள் மறுதினம் விடுதலை செய்யப்பட்டனர்

பலமாகத்தாக்கப்பட்டதால் சுவாசிக்க முடியாத நிலையிலிருந்த இருவரையும் உறவினர்கள் 20ம் திகதி திருமலை வைத்திய சாலையில் அனுமதித்தனர் மீண்டும் 24ந் திகதி ஆஸ்பத்திரியிலிருந்து இருவரையும் இராணுவம் அழைத்துச் சென்றுள்ளது. இதுதொடர்பாக உறவினர்கள் திருமலை பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (சி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஈராண்டுப் பகுதிநேரக் கல்விப் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி 1987/88

## புதிய அனுமதி

பட்டம் பெற்றபின் மூன்றுண்டுகால ஆசிரியர் சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தேர்வு நாடிகள் 31.07.1987-இல் 50 வயதிற்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் 10/- செலுத்திய பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேட்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைசமர்ப்பித்தல்வேண்டும்.

விண்ணப்பங்களைசிரேட்ட உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 31 07.87ந் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்,
பல்கலைக்கழகம்.

[ஏ 117]

## இளைஞர்தற்கொலை

(புங்குடுதீவு நிருபர்)

குடும்பத்தகராறு காரணமாக மனமுடைந்த இளைஞர் ஒருவர் நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் புங்குடுதீவு கிழக்கு 10-ம் வட்டாரத்தில் நடந்துள்ளது.

தற்கொலை புரிந்தவர் செல்வன் தர்மலிங்கம் குமார் (வயது 19) என்பவராவர்.

## மூளைக்காய்ச்சல் பெண்பலி

(பலாலி நிருபர்)

ஏழாலையில் மூளைக்காய்ச்சல் நோய்க்கு பெண்மணி ஒருவர் பலியானர்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த சுந்தரம் -பார்வதி (வயது 55) என்ற வயோதிய பெண்மணியே மூளைக் காய்ச்சல் நோயினுல் மரணமானவராவார்.


## ஷெல் தாக்குதல் சிறுவன் காயம்

(பலாலி நிருபர்)

காங்கேசன்துறை ஹபர்வியூ ஹோட்டல் முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு சிறுவன் படுகாயமடைந்தார்.

முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு கொல்லங்கலட்டி கிளானையை சேர்ந்த செல்லையா யோகராசா (வயது 10) என்ற சிறுவன் படுகாயம் அடைந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
ஆ. குழந்தை
தோற்றம்: 16-02-1909
மறைவு: 03- 06 1987

சிறுபான்மைத் தமிழர் மகாசபை, சீவல் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரும் சிறந்த சமூகத் தொண்டருமாகிய பெரியார் ஆ. குழந்தை அவர்கள் 3-6-87ல் காலமானுர். அன்னரின் அந்தியேட்டிக் கிரியை இன்று வெள்ளிக்கிழமை அன்னரது இல்லத்தில் நடைபெறும். உற்றூர், உறவினர், நண்பர்கள் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்.
167/5, 2ம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி-9661)

## இடமாற்றம்

நாட்டின் நிலைமையை முன்னிட்டு நம். 77, கே. கே. எஸ். வீதியில் இயங்கிவந்த

**சலாம் டிங்கர் வேக்ஸ்**

நம். 58, ஆஸாத் வீதி, சோனகதெரு யாழ்ப்பாணம் என்ற இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (சி 9668)

இருபாலையில்

## திரு. வெக்டர் ஆசிரியரின் தூய/பிரயோக கணித வகுப்புக்கள்

**A/L 88 வகுப்புக்கள்**
புதிதாக
**யூலை 4ம் தேதி ஆரம்பம்**

| | PURE | APP |
|---|---|---|
| 88 | Sat. - 3.00 p m.<br>Sun. - 2.30 p.m. | Sat. - 4.15 p. m.<br>Sun. - 3.30 p. m. |
| 89 | Sat. - 12.30 p. m.<br>Sun. - 12.30 p.m. | Sat. - 1.45 p. m.<br>Sun. - 1.30 p.m. |

மேலும் விபரங்கட்கு:

**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்**
இருபாலை, கோப்பாய்.

[ஏ 105]

## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி

இந்தியாவில் இருந்து இறக்குமதுசெய்த MK-12 வில்லியஸ் இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட சென்றிக் பம்ப் 2''X2'' பின்வரும் இடங்களில் விற்பனையாகின்றது.

**லிங்கம் அன் கோ**

21/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

44/2, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சி-9646

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட கைப்பம்புகளும் [Semi-Rotary Pumps], எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட நீர் இறைக்கும் கைப்பம்புகளும் விற்பனைக்குண்டு.

**சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட்**

206, 208. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

17, செம்மணி வீதி,
நல்லூர்.

# சுவிஸ் வங்கிகளில் உள்ள மார்க்கோஸின் பணவைப்புக்களை அந்தரங்கப்படுத்தத் தடை!

## சுவிஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பு

ஜெனிவா, ஜூலை – 2

**முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. பேர்டினன்ட் மார்க்கோஸின் சுவிஸ் வங்கிப் பணவைப்புக்களை அந்தரங்கமாக வைத்திருக்கக்கூடாதென சுவிஸ் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. திரு. மார்க்கோஸின் கோரிக்கையை நிராகரித்து இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

சுவிஸ் வங்கிகளில் ஆயிரம் கோடி டாலர்கள் பணத்தை தமது சொந்தக்கணக்கில் திரு. மார்க்கோஸ் வைப்புச் செய்துள்ளார்

இப்பணவைப்பு சட்டவிரோதமானதென்று பிலிப்பைன்ஸின் தற்போதைய ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்கினோ தெரிவித்திருந்தார். பிலிப்பைன்ஸ்அரசு இப்பணத்தை உரியமுறையில் கைப்பற்றும்எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து திரு. மார்க்கோஸ் சுவிஸ் வங்கிகளிலுள்ள தமது வைப்புக்களை அந்தரங்கமாக வைக்கும்படி அவ்வங்கிகளிடம் கேட்டிருந்தார்.

அவரின் இக்கோரிக்கைக்கு எதிராக சுவிஸ் உயர்நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கிலேயே மார்க்கோஸின் வங்கி வைப்புக்களை அந்தரங்கமாக வைக்கக் கூடாதென சுவிஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரஸோன் அக்கினோ திரு மார்க்கோஸின் சுவிஸ் வைப்புக்கள் பற்றித் தெரிவித்திருப்பதாவது:''திரு. பேர்டினன்ட் மார்க்கோஸ் தமது 25 வருடகால ஆட்சியின்போது லஞ்சம் ஊழல் மூலம் சம்பாதித்ததே இப்பணமாகும். இவை சட்டவிரோதமானவை. பிலிப்பைன்ஸ் அரசினால் கைப்பற்றப்படவேண்டியவை'' என்பதாகும்.

## குவைத் துறைமுகத்தில் 10 கடல் கண்ணிவெடிகள்

லண்டன், ஜூலை 2

குவைத் துறமுகத்தில் பத்து கடல் கண்ணிவெடிகளை அமெரிக்க பாதுகாப்புத்துறை நிபுணர்கள் கண்டெடுத்துள்ளனர்.

இக்கண்ணிவெடிகள் சோவியத் தயாரிப்புக்களென்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானியர்களே அமெரிக்க கொடிகளின்கீழ் உள்ள கப்பல்களைத்தாக்கும் வகையில் இந்த கடல் கண்ணிவெடிகளை வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வளைகுடாவில் உள்ள அமெரிக்கக்கொடிகளைத்

(6-ம் பக்கம் பார்க்க)

## பிஸ்கே வளைகுடாவில்-----
# இந்தியக் கப்பல் தீப்பிடித்தது!

உலகச் செய்திகள்

லண்டன், ஜூலை 2

பிஸ்கே வளைகுடாவில் இந்தியக் கப்பல் ஒன்று தீப்பிடித்துக் கொண்டது.

'இந்தியன் கிரேஸ்' என்ற கப்பலேதீப்பிடித்துக்கொண்டதாகும். இக்கப்பல் வெடி மருந்துகளை ஏற்றிக்கொண்டு வந்திருந்தது. இதில் 40 பேர் இருந்தனர்.

இக்கப்பலில் ஏற்பட்ட வெடிவிபத்தே இக்கப்பல் தீப்பிடித்ததற்குக் காரணமாகும் இக்கப்பல் தீப்பிடித்ததையடுத்து இதன் காப்டன் பிரான்ஸ் கரையோரப் பாதுகாப்புப்பிரிவுக்கு அறிவித்தார். இதனையடுத்து அப்பாதுகாப்புப்பிரிவு ஸ்தலத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. அத்துடன அதிலிருந்த வெடிபொருட்களையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தியது. அக்கப்பலில் இருந்த அனைவரும் எதுவித பாதிப்புமின்றிக் காப்பாற்றப்பட்டனர்.

## கிரனேட் வெடித்து------
# சிப்பாய் ஒருவர் பலி! இருவர் படுகாயம்

(திருகோணமலை நிருபர்)

இராணுவ சிப்பாய் ஒருவர் வைத்திருந்த கிரனேட் தற்செயலாக வெடித்ததனால் ஒருவர் மரணமானார் மற்றுமிருவர் படுகாயமடைந்தனர்

'குரங்குப்பாலம்' இராணுவ முகாமைச் சேர்ந்த எம் ஜி எஸ். குமார (22 வயது) என்பவரே மரணமானவர். சந்திரரத்தின பண்டா, ரத்தினசிறி ஆகிய இருவரும் படுகாயமடைந்து அநுராதபுர வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்

மதகு ஒன்றைச் சோதனையிட்டுக் கொண்டிருந்தபோது சந்திரரத்தின பண்டா என்பவர் வைத்திருந்த கிரனேட் தற்செயலாக வெடித்ததாம். முன்னால் நின்ற குமார என்ற சிப்பாய் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானார். மற்ற இருவரும் படுகாயமடைந்தனர். (சி)

# 11-வயதுபைலட் உலகசாதனை

வாஷிங்டன், ஜூலை 2

உலகில் வயதில் மிகக் குறைந்த அமெரிக்க 'பைலட்' ஒருவர் அமெரிக்காவுக்குக் குறுக்கே தமது விமானத்தைஓட்டிச்சென்று சாதனை டரிந்துள்ளார்.

டெக்ஸஸ் மாநிலத்தைச் சேர்ந்த 11 வயதான ஜோன் கெவின் ஹில் என்பவரே இந்த வயதில் குறைந்த விமானியாவார்.

ஒரு வாரத்துக்கு முன்னர் இவர் லாஸ் ஏஞ்சல்ஸில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்தார். இடையிடையே சில இடங்களில் தரித்தபின்னர் இவர் நேற்று வாஷிங்டனில் தமது பயணத்தை முடித்துக் கொண்டார்.

இந்த இளம் பைலட்டான ஜோன் கெவின் ஹில் விமானத்தைச் செலுத்திய வேளை இவரது பயிற்சியாளர்களும் இந்த விமானத்தில் இருந்தனர்.

தமது பயணமுடிவில் ஜோன் கெவின் ஹில் கருத்து வெளியிட்டதாவது: ''உலக சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதே எனது அடுத்த திட்டமாகும் அத்துடன் ஒருவிண்வெளி வீராவதே எனது இலட்சியம்'' என்று தெரிவித்தார்.

## ராஜீவ் 3 நாள் சோவியத் பயணம்
# மாஸ்கோ நகர் இந்தியமயப்!

[மாஸ்கோ]

சோவியத் தலைநகரான மாஸ்கோவில் இந்தியாவுடனான நட்புறவைப் பிரதிபலிக்கும் வகையில் பலபுதிய அம்சங்கள் இடம்பெறவுள்ளன

மாஸ்கோவில் உள்ள இந்திரா சதுக்கத்தில் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் சிலைஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

'இந்திய விழா' ஒன்று மாஸ்கோவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. ஓராண்டுகாலம் இந்த விழா இங்கு இடம்பெறும்.

இவறறுடன் இந்திய உணவுச்சாலை ஒன்றும் மாஸ்கோவில் திறந்துவைக்கப்படவுள்ளது. இந்த உணவுச்சாலையில் முற்றிலும் இந்திய உணவு வகைகளே பரிமாறப்படும். இந்திய சுற்றுலாப் பயணத்துறையினர் இந்த உணவுச்சாலையை நிறுவியுள்ளனர்.

இந்திய - சோவியத் நட்புறவைப் பிரதிபலிக்கும் இந்த அம்சங்கள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் 3 நாள் சோவியத் விஜயத்தையடுத்து ஆரம்பமாகவுள்ளன.

திரு காந்தி நேற்று சோவியத் பயணமானார். அவர் சோவியத் அதிபர் திரு மிக்கேல் கோபச்சேவுடன் தெற்காசிய நிலைமை மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்துவார்.

## கிழங்கு பயிர்கள் அவசரமாக அறுவடை

[அச்சுவேலி நிருபர்]

குட்டியப்புலம்,பலாலி, வசாவிளான் பகுதிதோட்டங்களில் அறுவடைசெய்யாமல் கைவிடப்பட்ட கிழங்குப் பயிர்வகை அவசரம் அவசரமாக அறுவடை செய்யப்படுகின்றன.

பலாலி வசாவிளான் இராணுவமுகாமின் தாக்குதல் நடவடிக்கை, ஹெலி கண்காணிப்பு என்பனவற்றுக்கு பயந்து பலாலி வசாவிளான் தோட்டங்களில் அறுவடைக்கு தயாராகஇருந்த கறணை, மரவள்ளி மற்றும் கிழங்குப்பயிர்கள் அறுவடை செய்யபபடாமல் இடையில் கைவிடப்பட்டிருந்தன.

இந்திய உணவுக் கப்பலின் வருகையை அடுத்து எதிர்பாராத அமைதி நிலவுவதால் குட்டியப்புலம், வசாவிளான், பலாலி தோட்ட நிலங்களில் பயிர் செய்தவர்கள் தமது தோட்டங்களுக்கு சென்று கைவிடப்பட்ட கிழங்குவகைகளை அறுவடை செய்கின்றனர்.

மிகஅவசரமாக நடைபெற்று வரும் இந்தகிழங்கு அறுவடைக்குபிக்கான், அலவாங்கு, கடப்பாரை முதலிய உபகரணங்கள் மண்வெட்டியுடன் பயன்படுத்தப்படுகின்றன.

## இனந்தெரியாத கோஷ்டியால்----
# ஊர்காவல்படையின் ஆயுதங்கள் பறிமுதல்!

[திருமலை நிருபர்]

குச்சவெளிபபகுதியில் இனம் தெரியாத ஆயுதக் கோஷ்டி ஒன்று ஊர்காவல் படையினர் ஐவரின் துவக்குகளை பறிமுதல் செய்ததுடன் அவர்களிடமிருந்து ஐம்பதற்குமேற்பட்ட ரவைகளையும் அபகரித்துச் சென்றுள்ளது

கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது; இரவு வேளையில் திடீரென இப்பகுதியில் நுழை

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆடு, மாடுகள் ஏற்றிவந்த---
# படகு படையினரால் திருப்பிவிடப்பட்டது

(வேலணை நிருபர்)

நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து கால் நடைகளையும் வெண்காயமூடைகளையும் ஏற்றிக்கொண்டு கடந்த திங்கட்கிழமை காலை குறிகாட்டுவான் இறங்குதுறை முகத்தை நோக்கி புறப்பட்டு வந்த நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் படகொன்று நயினாதீவில் முகாமிட்டிருக்கும் பாதுகாப்புப்படையினரின் சோதனைக்குட்பட்டது

குறிகாட்டுவானுக்குச் செல்லாது உடனடியாக நெடுந்தீவுத்துறை முகத்திற்கு திரும்பிச் செல்லுமாறு பாதுகாப்பு

[6ம் பக்கம் பார்க்க]

## அச்சுவேலி தபாலகத்தில்------
# மாதாந்த நன்கொடைப் பணம் வழங்கப்படும்

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலி தபால் அலுவலகத்தில் வழமைபோல சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் வறியமக்களிற்கான மாதாந்த நன்கொடைப் பணம் வழங்கப்படுகிறது

அச்சுவேலி தபால் அலுவலகம் இராணுவத்தினால் சேதப் படுத்தப்பட்டதை அடுத்து சென்றமாதம் 17ம் திகதி தொடக்கம் ஆவரங்கால் உப தபால் அலுவலகத்தில் செயற்பட்டுவந்த போதிலும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் உதவி நன்கொடைப்பணம் வழமைபோல அச்சுவேலி தபால்அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அச்சுவேலி இடைக்காடு பகுதி மக்களுக்கான நன்கொடைப்பணம் கொடுப்பனவுகள் நடைபெறுகின்றன.

# நித்திரையிலிருந்தபோது படையினரால் கைது

[திருமலை நிருபர்]

மூதூர் மாவடிச்சேனை கிராமத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்து 15 பேரைக் கைது செய்துள்ளனர்.

கடந்தமாதம் 25ம் திகதி அதிகாலையில் இங்குவந்த இராணுவத்தினர் வீடுகளில் நித்திரையில் இருந்தவர்களை தட்டி எழுப்பிக் கைது செய்தனர்.

இதன்போது ஒருவரைஓடச் சொல்லிவிட்டு சுட்டனராம். அவர் தெய்வாதீனமாகத்

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

குடி செய்வார்க்[கு] இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக்கெடும். — குறள்.

[சமுதாயத்தின் குறைகளைத் தீர்க்க முன்வருபவர்கள் எல்லையற்ற கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராக இருக்கவேண்டும்]

## நமது நோக்கு

# விசரும் வெறியும் வெளியேறவேண்டும்

'சிறையை விட்டுத் தப்பித்து வெளியேறிவிடு' என்று மன்றுடினுன் சொக்கிரட்டீஸ் மீது மதிப்புக்கொண்ட நண்பன் கிரிட்டோ.

சொக்கிரட்டீஸ் ஒழுக்கமே உருவாய், கருத்தே காவியமாய் தெளிந்த முகத்தோடு நண்பனை உற்றுப் பார்த்தார்.

"அறிவு எனக்கு வழி காட்டுறெது. நான் இப்பொழுது தப்பித்து வெளியேறினல் அது சரியா என்று சிந்திக்கும்படி அறிவு ஆணையிடுகிறது. அது தவறென்று கண்டால் அதனை நான் செய்யமாட்டேன். இங்கு தங்கினல், இறக்கநேரிட்டாலும் அதற்குநான் அஞ்சமாட்டேன்" என்று பதருமல் கூறினர் அந்தப் பெரியார்.

யாழ்ப்பாணத்தில் சிறைவாசம் வாழும் மக்கள் அனைவரும் உலகம் கண்ட மகா ஞானியைப்போல் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்கள்; ஆனல் ஒருசிலராவது இன்று இங்குநிலவும் பதற்றத்தைத் தணிக்கமுன்வரவேண்டும்.

பீதியும் பதற்றமும் குடாநாட்டைக் கைப்பற்ற முயலும் அரச ராணுவத்தின் விதைபொருள்கள். இன்றைய போர்நிலையில் இவை நன்ருக விளையுமென்பது எவருக்கும் தெரிந்ததே!

அடுத்தகட்ட 'லிபரேஷன் ஒப்பரேஷன்' என்ற தலைப்பில் எமது பத்திரிகையில் வெளிவந்தசெய்தி, வடமராட்சியுடன் ஏனையபகுதிகளை இணைக்கும் ராணுவ திட்டமென்பதே! திட்டத்துக்குப் பிரபலம் கொடுத்ததால், இங்கொரு பெரும் போர் தயாராகிறதென்று நினைப்பது பீதியின் பிரதிபலிப்பு.

மரணத்துக்குமுன் பன்முறை இறந்து பிழைக்கும் கோழைகள் ஆயுதபோராட்டத்தில இறங்கிய இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் உயிர் இழந்த சாதனையை சற்றும் புரியாதவர்களே.

நாட்டை (குடா) விட்டே வெளியேறியவர்கள் இன்றில்லாவிட்டால் என்ருெரு நாளாவது ஞானி சொக்கிரட்டீஸ் கூறியதுபோல் தவறென்று நிச்சயம் துன்பப்படுவார்கள்.

உணவுதரும் நீங்களே உயிரையும் பாதுகாக்க வேண்டுமென்ற குரல் இங்கு பரவலாக எழுப்பப்படுகிறது. இக்கோரிக்கையில் ஒரு பொல்லாப்பும் இல்லை ஆனல் இலங்கை அரசின் ராணுவத் திட்டங்களுக்கு நாம் சரணடைந்து விட்டோமென்ற அர்த்தம் இதில் காணப்படும்.

யாழ்ப்பாணத்தில் இனிமேல் போர்நிகழாது என்ற நம்பிக்கை தெரிவித்த குப்தா குறிப்பிட்ட செய்தி மக்களை நிச்சயம் உற்சாகப்படுத்தும்.

யாழ்ப்பாணத்தில் நேரடிப்போரைக்கண்ட மக்கள் தமிழ் இளைஞரின் வீரத்தைமட்டுமல்ல இராணுவத்தின் கொடுமைகளையும் நேரில் அனுபவித்தவர்கள்.

உலகில் வேறெங்கும் காணமுடியாத நிகழ்ச்சி, யாழ்.ஆஸ்பத்திரிமேல்நடத்திய தாக்குதல் என்ருல் போரின் விளைவுகள் பல அத்தகையவே.

மாணவர்கள் ஒன்றுகூடி பரீட்சைகளை பகிஷ்கரிக்க முடிவு செய்தமை, இப்போரில் அவர்கள் நேரடியாகப்பங்குகொண்டதை நிரூபிக்கிறது. இதற்கு மாருக தாங்களும் தங்கள் பிள்ளைகளும் இவ்வித முடிவிலிருந்து தப்பிக்கொள்ள முயல்பவர்கள், போரில் தோல்விக்கு உதவுகின்றனர்.

'விசர் மாறிவிட்டது; உலக்கை கொண்டுவா கௌபீனம்' கட்ட என்ருெரு நாடோடி வாசகம் உண்டு. இது ராணுவத்தின் வெறியாட்டத்துக்குப் பொருத்தமானது. கோட்டையிலிருந்துதினமும்வெளிவரும் ஷெல் அடி இதற்கு உதாரணம்; அதற்கு மேலாக அரசியல் தீர்வில் இன்றும்நம்பிக்கைகொண்ட பாதுகாப்பு அமைச்சர் தூர ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விடுக்கும் செய்தி "யாராவது இலங்கை மீது படையெடுத்தால் சிங்களவர் மத்தியில் வாழும்தமிழரின் பாதுகாப்புப்பாதிக்கப்படும்" என்பதாகும்.

வதந்திகள், மிகைப்படப் பேசுதல் எழுதுதல் போலிப் பிரசாரங்கள் ராணுவத்தின் குண்டிலும் ஷெல்லிலும்மிக்கபயங்கரமானவை. நீண்டகாலப் பேயாட்டத்தின்பின் ஆரம்பித்த ஆயுதப்போரே சிலவருடங்களாக நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கில் மக்களை இழந்த கட்டத்திலும் நாம் அனுபவமற்ற பேதைகளாக வாழமுடியாது.

போரை நிறுத்தவும், கௌரவமான சமாதானத்துக்கு வழிகோலவும் மக்கள் அச்சமின்றி ஒத்துழைக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம்போராளிகள் தலைவர் பிரபாகரனுக்கு விடுத்த அழைப்பு இன்றைய நிலையில் அவசியமான கருத்து ஒற்றுமையைச் சுட்டுகிறதெனலாம்.

## நகுலேஸ்வர மகாவித்தியாலயம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய வகுப்புக்கள் இம்மாதம் 6 ம் திகதி திங்கட்கிழமை முதல் மயிலங்கூடல் வைரவ சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

### போக்குவரத்து, வைத்திய வசதி, தொழில்வாய்ப்பு—— அடிப்படை தேவைகள் பாதிக்கப்பட்டுள்ள

# மயிலிட்டி பலாலி மக்கள்

கடந்த ஞாயிறு பலாலியில் ஒரு பரபரப்பு; விபத்தொன்றில் இளம் ஆண்மகன் ஒருவனுக்குப் பெரிய வெட்டுக்காயம். அதற்கு வைத்தியம் செய்ய பலாலியிலோ, மயிலிட்டியிலோ வழிவகை இல்லை. தெல்லிப்பழைக்குச் செல்வதற்குப் பயன்படுத்திய காங்கேசன்துறை-யாழ்ப்பாணவீதியிலோ, அண்மித்த குறுக்குப் பாதைகளிலோ எவருமே நடமாட முடியாத பயங்கரநிலை. பீறிட்டுப்பாய்கின்ற இரத்தத்திற்கு ஒரு கட்டு கட்டிவிட்டு சைக்கிளின் முன் 'பார்' இல் காயப்பட்டவரை வைத்துக்கொண்டு, பற்றைக் காடுகளினூடாகச் செல்லும் கரடுமுரடான மாட்டுவண்டிப் பாதையில் கல்-முள் மீதுபறந்து அச்சுவேலி சென்று அங்கிருந்துதான் சிகிச்சைபெற வழிவகை தேடமுடிந்தது.

இன்று மயிலிட்டி-பலாலி கிராமங்களிலே வாழும் மக்கள் படும் அவலங்களை எடுத்துரைத்தால் கொடிய காட்டு விலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் நடுவே எங்கோ தொலைதேசத்தில் அமைந்துள்ள ஒரு காட்டுக் கிராமத்தில் எப்படியாவது வாழ்க்கையை ஓட்டுகின்ற மக்களின் கதைபோல் இருக்கின்றது

மயிலிட்டிச்சந்திக்கு மேற்கே கீரிமலைவரை கரைப்பகுதியில் மக்கள் இன்று இல்லை. ஆனல் மயிலிட்டிச் சந்திக்குக் கிழக்கே பலாலி, வளலாய்வரை 2,500 குடும்பங்கள் பெரும் கஷ்டத்தின்மத்தியில் வாழுகிருர்கள்.

### போக்குவரத்து ஸ்தம்பிதம்

யாழ் -பலாலிவீதி பலாலிப் பகுதியிலே பொதுமக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டு மூன்று வருடங்களாகிறது. பலாலி, மயிலட்டி கிராமங்களிலிருந்து வெளியிடங்களுக்குப்போக்குவரத்து யாழ் - காங்கேசன்துறை வீதி வழியாகவே இவ்வாண்டின் முற்பகுதி வரைநடைபெற்று வந்தது. கடந்த யூன் மாதம் 8ம் திகதிய சம்பவங்களுக்குப் பிறகு இந்த வீதியோ வீமன்காமம் வழியாக இருந்த குறுக்குப் பாதையோ மனித சஞ்சாரத்திற்கே இடமளிக்காதவை போலமாறிவிட்டன.

இதனல், எத்தேவைகளை முன்னிட்டும் வெளியிடங்களுக்குச் செல்லவேண்டிய மயிலிட்டி-பலாலி மக்கள், பலா

## செல்வன்

லியிலிருந்து 'தேனுறுவெளி' என்றழைக்கப்படும் பற்றைக் காட்டுப் பிரதேசத்தினூடாக கால்நடையாகவோ அன்றேல் சைக்கிளிலோ மட்டுமே (அச்சுவேலி வழியாக) குடாநாட்டின் இதரபகுதிகளுக்குச் சென்றுவரமுடிகிறது டச்சைக் குழந்தைகளைக் கையிலேந்தியபடி தாய்மார் எரிக்கும் வெயிலில் கால்கடுக்கவிரைந்துநடக்கும் கண்ருவிக் காட்சியைக் காண கல்நெஞ்சம் கசியும்.

### அடிப்படைத் தேவைகளுக்கே தட்டுப்பாடு

உணவு, எரிபொருள், வைத்தியம், கல்வி ஆகியமிக அடிப்படைத்தேவைகளுக்கே பயங்கரப் பற்ருக்குறை நிலவும் பிரதேசமாக இன்று பலாலி-மயிலிட்டி மாறியுள்ளது. மாவிட்டபுர-அச்சுவேலி முற்றுகை நடைபெறுவதற்கு முன்பு கூட பலகடைகள் மூடப்பட்டு, விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது. முற்றுகை நடைபெற்ற அந்த ஒருகிழமை ப. நோ. கூ. ச. கிளைகளிலோ, தனியார் கடைகளிலோ உணவு தன்னும் போதியளவு இல்லாது மக்கள் அல்லோகல்லோலப்பட்டனர்.

### கூட்டுறவுச்சங்கக் கிளைகளின்கஷ்டம்

காங்கேசன் துறைமுகத்திற்கும் பண்டகசாலைக்கும் மிக அண்மையிலேதான் இப்பகுதி அமைந்திருந்தாலும், அங்கு இறக்கப்படும் பொருட்கள் பெருஞ்சுற்றுப் பாதையாலேயே இங்குள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளை வந்தடைய வேண்டியுள்ளது. கிளை முகாமையாளர்கள் பலரும் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளே வர அவர்கள் பெரும் சிரமம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மக்களின் நன்மை கருதி, கிளையில் சாமான் விநியோகிக்கும் நேரத்தை இவர்கள் நீடித்தால், ஊரடங்குச் சட்ட அமுல் காரணமாக வீடு திரும்ப முடியாது இங்கேயே தங்க வேண்டி ஏற்படுகின்றது.

### வைத்திய வசதி நலிவு

பலாலிக்குரிய சிறிய அரசாங்க மருந்தகம், அதன் வைத்திய அதிகாரி வர முடியாமையால் மூடிக்கிடக்கிறது. மயிலிட்டிக்கென்று உள ஒரே அரச மருத்துவமனை மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை ஒன்றேதான். அங்கே பணிபுரியும் பெண் வைத்திய அதிகாரி உண்மையிலேயே கடமையின் முன்னிலையில் உயிரைத் துச்சமாக மதிக்கும் வீரமங்கை தான். நாள்தோறும் பல மைல்கள் துவிச்சக்கர வண்டியில்பயணம் செய்து அச்சுவேலி வழியாக என்றாலும் ஒருவாறு வந்து சேர்ந்து மக்கள் நோய்களுக்கு மருந்தளித்து இவர் திரும்புகிருர். எனினும் அவர் இல்லாத வேளையில் ஆபத்துக்குதவ ஓர் அரச வைத்தியரேனும் இப்பகுதியில் இல்லை. அச்சம் காரணமாக, அரச மருத்துவ மாதோ, அவரது துணையாளர்களோ நிறைமாத கர்ப்பிணிகளுக்கு உதவ இப்பகுதிக்கு வருகை தர முடியவில்லை

### தொழில் வாய்ப்பின்மை

கடற்ருெழிலாளர் கட்டுமரத்தில் தானும் கடலுக்குள் இறங்க முடிவதில்லை; தோட்டங்களில் பயிர் நட்டார் பயிரைப் பேணச் செல்ல முடிவதில்லை. கூலிப்பிழைப்பையும், மீன் - கருவாடு வியாபாரத்தையும் நம்பியிருந்தோர். வாழ வழி தெரியவில்லை. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் தற்காலிக வேலை செய்தோர் இன்று விழிக்கின்றனர். துறைமுகத்தில் மூடைகள் சுமந்தோரின் குடும்பங்கள் இன்று சீரழிகின்றன.

### அலுவலகங்கள் இடமாற்றம்

தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) உதவி அரசாங்க அதிபர் அம்மா தற்காலிகமாக மல்லாகத்தில் கிராம அபிவிருத்திச் சபையின் சிறிய அலுவலகத்தில் முகாமிட்டிருக்கிருர். தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினருக்குத் தற்காலிகமாகத் துர்க்கையம்மன் தேவஸ்தானத்தினர் தமது அலுவலகத்தில் இடமளித்துள்ளனர். காங்கேசன்துறைத் தபாலகம் சுன்னகம் தபால் நிலையத்தின் ஒரு பக்கத்தில் பணிபுரிகிறது. வசாவிளான் தபாலகம் உரும்பயில் இயங்குகிறது.

### உத்தியோகத்தர் அச்சம்

மயிலிட்டி - பலாலிப் பகுதியில் வாழும் அரச உத்தியோகத்தர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இங்கு வாழாத எந்த உத்தியோகத்தரும் இங்கு வருகைதருவதற்கு அஞ்சுகின்றனர். அது ஓரளவுக்கு நியாயமான அச்சமும் தான். கிராம சேவையாளர் நிவாரண விடயமாகத் தகவல் சேகரித்தாலும் செல்ல வேண்டியுள்ள போது, மயிலிட்டி பலாலி மக்கள்யாராவது மல்லாகம் - தெல்லிப்பளை அலுவலகங்ளுக்கு வந்த பின்னர் "இவரைக் கூட்டிச் சென்று பத்திரமாக அனுப்பி வையுங்கள்என்றுமேலதிகாரி அவர்களிளம் கரிசனையோடு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. மீன்பிடிப் பரிசோதகர் போன்ருேர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுசைக்கிளில்வந்து கடமையாற்றுகின்றனர்.


யாழ். குடாநாட்டின் ஒரு கேந்திர ஸ்தானத்தில் வாழ்ந்துகொண்டும்கூட இத்தனை அல்லல் படவேண்டியுள்ள இந்த மக்களது துயர் நீங்க நன்மனத்தோர் தங்களால் ஆனதைச் செய்வது பெரும் புண்ணியமாயிருக்கும்.

## நான் யார்?

ஒவ்வொருவரும் 'நான் யார?' என்ற கேள்வியைத் தன்னைத்தானே கேட்டுவிடை காண முயற்சித்தால் என்ன விடை வரும்? பலர் உண்மைச் சைவசமயிகளாக இல்லாதிருப்பதை இக்கேள்வியின் பதில்கள் உணர்த்தும்.

சைவசமயிகள் ஒவ்வொருவரும் சைவசமயிகளாக வாழ விரும்பாமல் மிகக்குறிய இலட்சியத்துடன் தானும் தன்குடும்பமும் வாழப் பிறர்கெட்டாலும் பரவாயில்லை என்று நினைக்சமுற்படுகிருர்கள். இது மட்டுமன்றி நம்மில்பலர் சமய உண்மைகள் பலவற்றை கேட்டும் படித்தும் இருந்தாலும் அவற்றின்படி வாழவிருபாமல் வெளிவேடத்தாலும் 'தம்பட்ட மடிப்பதாலுமே' சைவ சமயிகளாய் வாழ விரும்புகின்ருர்கள்.

பலர் சமய தீட்சை பெற்று தினமும் சந்தியாவந்தனம் பஞ்சாட்சரசெபம், ஆலய வழிபாடு என்பன செய்தால் புலால் உண்ண இயலாது என்று அஞ்சி புலால் உண்பதற்காக இவற்றையெல்லாம்



விட்டு விடுகின்ருர்கள். விட்டு விடுவது மட்டுமல்லாமல் புலால், மது என்பவற்றை ஒதுக்கி சந்தியாவந்தனம் பஞ்சாட்சரசெபம் என்பன செய்பவர்களை உண்மைச் சைவ சமயிகள் என்று மதிக்காது தாமும் அவர்களும் சமம் என்று கருதுகிருர்கள். இப்படியான மாறுபாடான தன்மைகளை நீக்கி நான் யார்? என்ற கேள்விக்குஎந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் ஒரு சைவசமயி என்று சொல்லத்தக்கதாக வாழவேண்டும் என்று விரும்புவதும் முயற்சிப்பதும் நமக்கெல்லாம் நன்மை தரும்.

வேதநெறிதழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்
— பெரியபுராணம்

அருளாளன்

# தமிழர்களை நியமிக்க அரசு முடிவு

(கொழும்பு)

மலையக தோட்டப்பகுதிகளில் கிராமசேவையாளர், திருமணப் பதிவாளர்களாக தமிழர்களை நியமனம் செய்ய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

தோட்டப்பகுதிகளில் தமிழ் மொழி தெரியாதவர்கள் இப்பதவிகளில் இருப்பதால் ஏற்படும் மொழிப் பிரச்னைகளை தவிர்க்கவும் பொதுமக்கள் சிங்கள அதிகாரிகளிடம் தவறான தகவல்களை அளித்துவருவதாலும் அரசுக்கு ஏற்படும் பலசிக்கல்களை தவிர்க்குமுகமாகவே இந்நியமனம் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பதவிகளுக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் விரைவில் பதவியேற்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வர்த்தகசங்கம் கோரிக்கை

நெல்லியடி வியாழன்

அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடேற்பட்டு மக்கள் அல்லற்படும் இன்றைய நிலையில் பொருட்களைப்பதுக்குவதையும் கொள்ளை இலாபம் பெறுவதையும் தவிர்க்குமாறு நெல்லியடி வர்த்த சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நியாய விலையில் இருக்கிற பொருள்களை விற்குமாறு மேற்படி சங்கம் சகல வர்த்தகர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

# கல்வி வளர்ச்சிக் கழகம்

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலி கல்விவளர்ச்சிக் கழகம் புத்தூரில் செயற்படுகின்றது.

அச்சுவேலியில் செயற்பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இலவசமாக உதவி வந்த "கல்வி வளர்ச்சிக்கழகம்" கடந்தமாதம் இராணுவத்தினால் தீமூட்டி எரிக்கப்பட்டு முற்றாக சேதப்படுத்தப்பட்டது.

தற்பொழுது கல்விவளர்ச்சிக் கழகத்தின் வகுப்புக்கள் புத்தூரில் நடத்தப்பட்டுகின்றன

# தமிழர்களை பாதுகாக்க கோரிக்கை

[சென்னை]

யாழ் குடா மக்களுக்கு உணவு அனுப்புவதுடன் இராணுவத்தினரின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் உருப்படியான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று திராவிடர் கழக பொதுச்செயலர் திரு கி. வீரமணியும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு ப.நெடுமாறனும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சென்னையில் நேற்று இவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் இவ்வேண்டுகோளை விடுத்த அவர்கள் இலங்கை அரசு யாழ் குடாநாட்டு மக்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்த கிட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (சி)

## ஷெல் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமன் (20 வயது), அருள்(20 வயது) ஆகிய இரு இளைஞர்களுமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதிக்கு வந்த ஹெலிகொப்டர் கதிரிப்பாயைச் சுற்றி வட்டமிட்டு 50ஹலிபர் தாக்குதலை நடத்தியது. (ஒ)

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்கத்தினரின் நடவடிக்கைகள் பற்றி அவர்களிடம் விசாரிக்கப்படும் என்றும் அவ்வதிகாரி கூறியுள்ளார்.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்திய செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் தமிழ் மக்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று வருகிறார்கள் என்றும் இலங்கைப் படையினருக்கு எதிரான விபரங்களைச் சேகரிக்கிறார்கள் என்றும் கொழும்புக்குத் தகவல் கிடைத்திருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு ஒருமாத காலம் இங்கு தங்கியிருக்கும் 'விசா' வழங்கப்பட்டிருப்பதாகவும் இக்கால அவகாசம் எந்தக் காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாதெனவும் வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் கூறியதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

# ஆத்ம சாந்திதானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீர மரணமடைந்த திரு. கனகசபாபதி ஹரிச்சந்திரா (ராதா) ஆத்மசாந்தித் தானம் இன்று முற்பகல் வண்ணார் பண்ணை ஓடை ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடல் பெற்ற திருத்தலமான திருகோணமலை ஸ்ரீமாதுரி அம்பாள் சமேத கோணேச பெருமான் ஆலய பரிவார மூர்த்திகளின் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறவுள்ளது. (ஒ)

# விபத்தில் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி

பண்டத்தரிப்பில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிதம்பரி ஜோதிராஜ் [26 வயது] என்பவர் பலியானார்.

இவர் ஓட்டிவந்த மோட்டார் சைக்கிள் வான் ஒன்றுடன் மோதியதால் படுகாயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். [ஒ]

## பாக். அச்சுறுத்தலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை பாகிஸ்தானுக்கு 7 கோடி 80 லட்சம் டாலருக்கு அதிநவீன ஏவுகணைகளைவழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதும் இந்திய பாதுகாப்பிற்குபெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## ஆனையிறவு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தெரியவந்ததைத் தொடர்ந்து உடனடியாக விபரம் மாங்குளம் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து மாங்குளம் இராணுவத்தினர் சம்மந்தப்பட்ட தனியார் சொகுசு பஸ் வண்டி அங்கு சென்றடைந்ததும் பிரயாணிகளை சோதனை நடாத்தியபோது இந்த இரண்டு இராணுவத்தினரும் பஸ்ஸில் இருக்கக் காணப்பட்டனர் அந்த இருவரையும் அவர்கள் கைது செய்து தடுத்து வைத்துள்ளனரெனத் தெரியவந்துள்ளது. (வா)

## சண்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புகாரை தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் ஜனாதிபதிக்கு தெரிவிக்கையில்;

யாழ். குடாநாட்டு உணவு விநியோக நடவடிக்கைகள் குறித்து இவ்விரு பத்திரிகைகளுக்கும் உடனுக்குடன் தகவல கொடுக்கப்பட்டு வருகின்றபோதும் இவை இந்திய அதிகாரிகள் பற்றி விசமத்தனமான பொய்ப்பிரசார வேலைகளில் ஈடுபட்டுவருகின்றன என்றார்.

இலங்கை இனப்பிரச்னைக்கான விரைவான தீர்வு குறித்து இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் புதிய நடவடிக்கைகள் குறித்தும் திரு. டிக்ஸிற் ஜனாதிபதிக்கு இதன்போது விளக்கிக் கூறினார். (சி)

## இந்திய விமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை சர்வதேச சிவில் விமான போக்குவரத்து கவுன்ஸில் நடாத்தவுள்ளது.

கடந்த மாத முற்பகுதியில் ஒன்பது இந்திய விமானங்கள் இலங்கை அரசின் அனுமதியின்றி அத்துமீறிப் பிரவேசித்ததுசர்வதேசவிமானப்போக்குவரத்தை பெரும் ஆபத்திற்குள்ளாக்கியுள்ளதாகவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி இலங்கைசிவில்விமானபோக்குவரத்து அமைப்புத் தலைவர் திரு. உபாலி மல்கொட மேற்படி சர்வதேச அமைப்பில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக இந்திய அரசுடன் தொடர்புகொள்ளப்படுமென்று சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு இலங்கையிடம் தெரிவித்துள்ளது. [சி]

# வீடுகளைப் பார்க்கச் சென்று கவலையுடன் திரும்பிய மக்கள்

பலாலி, வியாழன்

இராணுவ நடவடிக்கைகளின்நிமித்தம் மாவிட்டபுரம், தையிட்டி, ஊறணி, காங்கேசன் துறை மயிலிட்டி ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் அப்பகுதிகளுக்கு தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றபோது, அவ்வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதைக்கண்டு அழுது புலம்பிய நிலையில் திரும்பியுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்படாத வீடுகளிலுள்ள குளிர்சாதனப் பெட்டி நீர்இறைக்கும் மோட்டர், மின்சார உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை எடுத்துச்செல்ல வேண்டாமென வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு இராணுவத்தினர் கூறிவருவதாகவும் கூறப்படுகிறது. இதனால் வெறும் கையோடு பாதுகாப்பான இடங்களுக்கு திரும்பியுள்ள மக்கள் மிகுந்த வேதனையுடன் உள்ளனர். [ரா]

# பாராளுமன்றத்தில் பகிஷ்கரிக்கும் உறுப்பினரின் படியை நிறுத்தமுடியாது — சிறிமா

(நமது நிருபர்)

பாராளுமன்ற கூட்டங்களை பகிஷ்கரித்தும், பாராளுமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமலும் பாராளுமன்ற சேவைகளில் சம்பந்தப்பட்டுக் கொள்ளாமலும் இருந்து வரும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிகளை நிறுத்தி விடுவதென ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளபோதிலும் இது குறித்து எதிர்க்கட்சியினர் எதுவித அக்கறையும் காட்டிக்கொள்ளவில்லையென்று தெரிகின்றது.

இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்க எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றம் வருவது பணத்தின் மீது ஆசைப் பிடித்ததனால் அல்லவென்றார்.

இப்பொழுது உள்ள சட்டதிட்டங்களின் படி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் போகாமல் விடுவதற்காக அவர்களின் படிகளை ஐக்கிய தேசியக் கட்சியினரால் நிறுத்தி விடமுடியாது. எதிர்க்கட்சியினரைப் பயமுறுத்துவதற்காகவே இப்படியெல்லாம் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள் என்றார் திருமதி பண்டாரநாயக்க.

## இரு தடவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினர் விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

இரண்டாவது தடவையாக இரண்டு ஹெலிகாப்டர்களின் உதவியுடன் சரமாரியான 'ஷெல்' துப்பாக்கிப் பிரயோகங்களுடன் வெளியே வந்த இராணுவத்தினர் புலிகளின் எதிர்த்தாக்குதலை அடுத்து முகாம் திரும்பினர்.

இச்சம்பவத்தின்போது போராளிகள் தரப்பில் மூன்று பேர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திடீர்த்தாக்குதல் சம்பவத்தை அடுத்து அங்குவள மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச்சென்றதாகவும் தெரியவருகிறது. [வா]

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், வெள்ளி

க. பொ. த உயர்தரப் பரீட்சை சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்ஒன்று இன்று பிற்பகல் மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

சகல உயர்தர பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோரின் பிரதிநிதிகள் ஐவர் உடபட பத்து மாணவப்பிரதிநிதிகளையும் இக் கூட்டத்தில் கலந்து கொளளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புசென்ற லொறிகளில் சிலவற்றை வவுனியாவில் வைத்து திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மா ஏற்றிக்கொண்டு கதிர்காம பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டனவாம்.

இந்த லொறிகளில்கொண்டு செல்லப்பட்ட கோதுமை மா அப்பகுதி மக்களுக்கு பங்கிட்டு அன்பளிப்பாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த லொறிகளை செலுத்திச்சென்ற சாரதிகளுக்கு 500 ரூபா சம்பளமாக வழங்கப்பட்டதுடன் நல்ல முறையாகவும் உபசரிக்கப்பட்டனர் எனவும் தெரியவந்துள்ளது. (வா)

## தமிழ் மக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உணவு வழங்கப்பட்டிருந்தால் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு மரணித்திருக்க மாட்டார்கள். அப்படியான ஒருநிலைமை யாழ் குடாநாட்டில் ஏற்படாதவகையில் இந்தியாவின் இந்த நடவடிக்கையானது வரலாற்று முக்கியத்துவமானது" என்றார்.

இனப்பிரச்னைக்குஒரு அரசியல் தீர்வுகாணும் வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இந்திய-இலங்கை அரசுகளால் உருவாக்கப்பட்டதே டிசம்பர் 19ந் திகதிய யோசனைகள் இந்த யோசனை குறித்து இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் வேற்றுமை காணப்படுகிறது.

டிசம்பர் 19ம் திகதி யோசனை பேச்சுவார்த்தைக்கு ஒரு ஆரம்பமும், அடிப்படையுமென இந்தியா கூறுகிறது ஆனால் இலங்கை அரசோ ஆரம்பம் என்பதைத் தவிர்த்து அடிப்படை எனக்கூறுகிறது. நாமும் இந்தியாவின் கருத்தையே ஏற்றுக்கொள்கிறோம். பேச்சுவார்த்தைகளினிடையே சில திருத்தங்கள், மாற்றங்களைச் செய்து ஒரு தீர்வு காணப்படலாமென்பதே எமது நிலைப்பாடு

எனினும் எமது மக்கள்மீது அரசாங்கம் தனது படைகளை ஏவி இவ்வளவு கொடுரங்களைக் கட்டவிழ்த் பின்பும் இலங்கையரசுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்துவதற்கு நாம் தயாராக இல்லைஎன அவர் கூறினார்.

இதேவேளை இந்தியாவின் தலைமையில் ஒரு இணக்கம் ஏற்பட்டு அதனை நடைமுறைப் படுத்தும் பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டால் மட்டுமே தமிழர் பிரச்னைக்கு ஒரு சமாதானத்தீர்வு வரமுடியுமெனவும் திரு. சிவசிதம்பரம் கூறினார். (கே - ரா)

யாழ்ப்பாணக் கல்லூரி
தொழில்நுட்ப நிறுவனம்
கல்வி ஆண்டு 87/88

புதிய கல்வி ஆண்டு வகுப்புக்கள் 1-7-87ல் ஆரம்பமாகிவிட்டன. சகல மாணவர்களும் உடனடியாக தவணைப்பணத்தை செலுத்தி, பெயர்களைப் பதிவு செய்து, தொழில்நுட்பக் கல்வியை/பயிற்சியை தொடருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பணிப்பாளர்,

[எ-112]

க. பொ. த. (உ. த) பரீட்சை
ஆகஸ்ட் 1987.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 03-07-87 வெள்ளிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு தத்தம் பாடசாலை அதிபர்களைத் தவறாது சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

க. அருணாசலம், தலைவர்.
பூ. க. இராசரத்தினம், செயலாளர்.

வடமாகாண அதிபர்கள் சங்கம்

[ஏ-124]

# பனம் பொருள்கள் உற்பத்திக்கு ஏற்பாடு

மண்டைதீவு, வியாழன் யாழ் மாவட்டத்திலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களை கருப்பட்டி, கல்லாக்காரம், பனம்பாணி, பனம் பானம், பனம் சீனி போன்ற உணவுப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை உணவு உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களுக்கு ஊக்கமும் உதவியும் வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இவ்வாண்டுக்கான உற்பத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—19 03-7-1987)
கிழமை—வெள்ளி
திதி— ஸப்தமி
நட்சத்திரம்— உத்தரம்

மேடம்:- எதிர்பாராத பணமுடை ஏற்படும், குறிக்கோள் தடையுமுண்டாம், பொருளும் தவறக் கூடும்.

இடபம்:- ஓவியர்கள் வாழ்க்கையும் ஒளிமயமாகும், இரு தொழில் பிரியம் உண்டு, வணிகர்கள் முன்னேற்றமடைவர்.

மிதுனம்;- நேர்முகப்பரீட்சைக்கு உகந்ததினம் தொழிலிலும் லாபம் உண்டாம், தொல்லைகளும் தீரும்.

கடகம்:- அந்நியர் பகையுமுண்டாம், அவதானமாக நாளைக்கழிக்கவும், வாகன விபத்தும் மேற்படலாம் கவனம்.

சிங்கம்:- குடும்பத்தில் பூசல்கள் தோன்றும், பணவிரையமுண்டு, நிதானப்புத்தியுடன் செயல்படவும்.

கன்னி:- குடும்பப்பிணி தலை தூக்கும், வாய்வு கோளாறினால் வேதனைப்படுவீர்கள், நீண்டநாள் எதிர்ப்பார்த்த வெதனம் இன்று தடைப்படலாம்

துலாம்:- ஆசிரியர்களுக்கு மகத்தானதினம் வாக்குப் பலத்தால் காரியத்தைச்சாதிப்பீர்கள், கடன்தொல்லை தீரும்

விருச்சிகம்;- அக்கினி ஆயுத பீடையுண்டு, அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், சகோதரசஞ்சலமுண்டாம்.

தனுசு:- அன்னையின் ஆசியுண்டு, வெளியிடத் தொடர்பு பெருகும், பொறியிலாளர் போற்றப்படுவர்.

மகரம்:- கடமையும் சிறக்கும், வரவிலும் முன்னேற்றமுண்டு, வாழ்விலும் தென்றல் வீசும்.

கும்பம்:- தொடங்கிய வேலை பாதியில் தடைப்படும் தனதானிய நஷ்டமுண்டம், பணவிடயத்தில் கவனம் செலுத்தவும்.

மீனம்:- நீண்ட நாள் அபிலாசை இன்று நிறைவேறும், பொன் பொருள் சேர்க்கையுண்டு, பொதுசன மதிப்புமுண்டாம்.

திருமலை ரவீந்திரன்

### ஊர்காவல்படை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த 30 பேரடங்கிய ஆயுதம் தரித்தகோஷ்டி 5க்குமேற்பட்ட வீடுகளை சுற்றிவளைத்து அங்கிருந்த ஊர்காவல் படையினரை பிடித்தது.

பின்னர் அவர்களை பயமுறுத்தி அவர்களிடமிருந்து துவக்குகளையும், ரவைகளையும் பறிமுதல் செய்ததுடன் எச்சரிக்கை செய்துவிடுவித்ததாம்.

## மீனுக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு நிருபர்]

கிளிநொச்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆனையிறவு, செம்பியன் பற்று, தாளையடி, ஆகிய கடல் பகுதிகளில் கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளமையினால் அப்பகுதிக்கு ஆளுக்கு தொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்லாததினால் அப்பகுதி எங்கும் மீனுககு பெரும் தட்டுப்பாடு ஏற்பட் பட்டுள்ளது.

ஒரு கிலோ மீன் நாற்பது ரூபா தொடக்கம் ஐம்பது ரூபாவரை விற்பனை செய்யப் பட்டு வருகிறது.

### வீட்டிலிருப்பவர்களை—–

# வெளியேறுமாறு படையினர் வலியுறுத்துகின்றனராம்

[பலாலி நிருபர்]

மாவிட்டபுரம், ஊறணி, மயிலிட்டி, தையிட்டி பகுதிகளில் வீடுகளைவிட்டு வெளியேறாது தொடர்ந்து வீடுகளில்தங்கி இருக்கும் குடும்பங்களை வெளியேறுமாறுஇராணுவத்தினர் வலியுறுத்துகின்றனராம்.

இப்பகுதிகளில் இருக்கும் மக்கள் வெளியே சென்று இராணுவத்தினரை பற்றிய தகவல்களை தெரிவித்துவிட்டு வருவதாக கூறியே அவர்களை வெளியேறுமாறு இராணுவத்தினர் வலியுறுத்தினர்களாம்.

இந்தியா சாப்பாடுதருகிறது நன்றாக சாப்பிட்டுவிட்டுஇருங்கள். பின்னர் நாங்கள்உங்களை பார்க்கவருவோம் என பொருட்களை எடுக்கச் செல்லும் மக்களிடம் படையினர் கூறிவருவதாக அங்கிருந்துவந்தவீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## குடும்பநல சேவையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்

தெல்லிப்பழைப் பகுதி குடும்ப நல சேவையாளரும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவிலிலுள்ள சுகாதார பணி மனைக்கு சமுகமளிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப் பகுதிக்கு வெளிப் பிரதேசத்திலிருந்து பயிற்சிக்காக வந்துள்ள குடும்பநல மாணவிகளின் ஒழுங்குகளை கவனிப்பதுபற்றியும் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் சுகாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆலோசிக்கபபடவிருக்கிறது.

### புதுக்காட்டுச் சந்தியில்—–

# ஹெலி சூடு பலர் படுகாயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புதுக்காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் இடம் பெற்றஹெலிகொப்டர் தாக்குதலினால் பலர் படுகாயமடைந்தனர். ஒரு டிராக்டரும் சேதமடைந்தள்ளது.

ஆனையிறவிலிருந்து புறப்பட்ட ஹெலிகாப்டர் ஒன்று இயக்கச்சி புதுக்காட்டுச்சந்தி போன்ற இடங்களில் தாழப் பறந்து தாக்குதலில் ஈடுபட்டது.

இப்பகுதியில் வந்த டிராக்டரைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் டிரக்டரில் சென்ற பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவரான அராலியைச் சேர்ந்த முத்துவேலு சுப்பிரமணியம் [வயது 28] என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [கு]

## பிரஜைகள்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பத்தைமேனி இடைக்காடு பிரஜைகள் குழுவினர் தமது பகுதியில் ஏற்பட்டுள்ள உயிர் இழப்புக்கள், அழிவுகள் சேதங்கள், மக்களின் அவலங்கள் பற்றி ஆராய்வதற்காக இம் மாதம் 4ம் திகதி புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

வளலாய், தம்பாலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மினி முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல், துப்பாக்கி வெட்டுக்கள் ஆகியவை தீர்க்கப்படுவதால் ஏற்படும் அனர்த்தங்கள்பற்றியும், இம்முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில்மக்கள் வாழ்க்கை பாதிக்கப்பட்டமையால் ஏற்பட்டுள்ளநிலைமைகள்பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப் படும். [ஓ]

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும். இதனைத் தொடர்ந்து மகேஸ்வரபூசையும் (அன்னதானமும்) நடைபெறும்

## செஞ்சிலுவைச் சங்கம் உதவும்

யாழ்ப்பாணம், வெள்

இராணுவ நடவடிக்கைகளினால் காணாமல் போனவர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் காணமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவ இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது

இதுபற்றிய விபரங்கள் நாளைய பத்திரிகைகளில் வெளியிடப்படும். [ஓ]

### படகு படையினரால்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

படையினரால் உத்தரவிடப்பட்டதையடுத்து மீண்டும் நெடுந்தீவுக்கு சென்றுள்ளது.

மேற்படி படகில் ஐம்பதிக்கு மேற்பட்ட ஆடு, மாடுகளும் வெண்காய மூடைகளும் இருந்தனவாம்.

### நித்திரையிலிருந்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பினர். பின்னர் அவரையும் தம்முடன் அழைத்துச் சென்றனராம்.

கைதானவர்களின் உறவினர்கள் பலர் திருமலை பிரஜைகள் குழுவிடம் இதுபற்றி முறையிட்டுள்ளனர். (சி)

### குவைத் துறைமுகம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கிய குவைத்எண்ணெய்க் கப்பல்களை பாதுகாக்கப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அத்துடன் அனைத்து வளைகுடா கப்பல் போக்குவரத்துக்களையும் பாதுகாக்கும் வகையில் கடற்படைப் பாதுகாப்பு வழங்கப் போவதாகவும் அறிவிததுள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பை சோவியத் கண்டித்துள்ளதுடன் வளைகுடாவில் தலையீடுகளைத் தவிர்க்கும்படியும் அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

LONDON EXAMS
Nov/Dec 1987
WEEKEND CLASSES
ICMA - Stages I & II
IDPM - Parts I & II
AAT - All Stages
IAB - All Stages
COMMENCING TOMORROW
Panel of Lecturers;
M/S. A. Armbu, K. Jeyaratnam, S Kathirkamanathan, A. Kailayapillai, Eugne Mariyampillai, Kandiah Navarendran, S. P. Sivapathasundaram, R. N. Varendran and popular varsity Lecturer.
Reduced Rates
Dedicated Lecturers
Safe Place
JOIN THE LEADERS
For further details:
CANTABIA Institute
[Shoot of Oxonia Colombo]
13, RASAVINTHODAM LANE,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம். ஏ [095]

LONDON EXAMS
(Nov./Dec. '87)
ஆரம்பம்: 11-7-87
I. C. M. A. (Cima)
Stages I & II
A. A. T.
Prelim.
விரிவுரையாளர் குழு:
V. கருணாநிதி
S. P. சிவஞானம்
S. சிவபாலன்
மற்றும் பிரபல பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
குறிப்பு: ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக் குறைந்தது 500 விரிவுரை மணித்தியாலங்கள் எடுக்கப்படும்
விபரங்களுக்கு:
RAPID RESULT INSTITUTE
212, கச்சேரி – நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[ஏ 111]

## இந்திய நிவாரணப் பொருள்---
# ஒருதடவை வழங்கவும் போதுமானதாக இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவினால் அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப்பொருள்கள் குடாநாட்டு மக்களுக்கு ஒருதடவை வழங்குவதற்கும் போதுமானதாக இல்லை.

யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் இந்திய தூதுதரக பாதுகாப்பு அதிகாரி காப்டன் குப்தா விடம் இவ்வாறு தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கு விநியோகிப்பதற்கு தொடர்ந்து உணவுப்பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் திரு. பாலசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ)

# நீதிமன்றத்திலும் அகதிகள் தஞ்சம்

பலாலி, வெள்ளி
மல்லாகம் நீதிமன்ற கட்டிடங்களிலும் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

தையிட்டி, ஊறணி, மயிலிட்டி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த நூற்றுக்குமேற்பட்ட மக்கள் இங்கு அகதிகளாக தஞ்சமடைந்துள்ளார்கள்.

இதுவரை எந்த ஒரு பொது ஸ்தாபனத்தின் உதவியும் தங்களுக்கு கிடைக்கவில்லையென அவர்கள் தெரிவித்தனர்.

## உண்ணு விரதம்

உரும்பிராய், வியா
தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் இந்தியா அங்கீகரிக்கக் கோரி உரும்பிராய் சென், மிக்கேல் ஆலய முன்றலில் திரு. எஸ். சிங்கராசா தலைமையில் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பெருமளவில் இளைஞர்களும் யுவதிகளும் முதியவர்களும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பங்குபற்றினர்.

## கிராம சேவையாளர் பிரிவு அதிகரிப்பு

உரும்பிராய், வியா
நல்லூர் உதவியரசாங்க அதிபர் பகுதியில் உள்ள பத்துக் கிராம சேவையாளர் பிரிவு பதினைந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஐந்து விசேட சேவை அலுவலாகளான க. சிவராசா, க. பஞ்சலிங்கம், க. யோகேஸ்வரன், நா நவரத்தினராசா, இ. சண்முகநாதன் ஆகியோர் கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

புதிய கிராம சேவையாளர் பிரிவுகளான திருநெல்வேலி மத்தி, வண் வடகிழக்கு, கொக்குவில் மத்தி, நல்லூர் வடக்கு, அரியாலை மேற்கு ஆகிய பகுதிகளுக்கு கிராம சேவை அலுவலர்களாக நியமிக்கப்படுவதற்கான ஒழுங்கினை நல்லூர் உதவியரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

## வன்னியில் இ.தொ.கா. நிலை என்ன?

வவனியா, வியாழன்
வன்னி மாவட்ட இடைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நிலை என்ன? என்பது பற்றி தமக்கு தெரியப்படுத்துமாறு வவனியா மாவட்ட இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு பி மதுரப்பிள்ளை அவசர தந்தியொன்றினை இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வவனியா, மன்னார், முல்லைத்தீவு, மாவட்டங்கள் வன்னி தேர்தல் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

## தொலைத்தொடர்பு நிலையம் இடமாற்றம்

ஒட்டுசுட்டான் நிருபர்
யாழ் கோட்டைக்கு அண்மையில் இயங்கிவந்த தொலைத்தொடர்பு அலுவலகம் தற்பொழுது பலாலி வீதியிலுள்ள இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது.

தற்போது இவ் அலுவலகத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

## அராலியில் உண்ணாவிரதம்

அராலி, வியா.
ஈழப்போராட்டத்தை அங்கீகரிக்கக்கோரி அராலிப்பகுதிகளில் உண்ணாவிரதம் அண்மையில் நடைபெற்றது.

அராலி வடக்குகுலனை ஞானவைரவ கோவில் முன்றலிலும், அராலி கிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் முன்றலிலும் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்
கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனியாண்டவர் அலங்கார உற்சவம் இன்று மாலை 5 மணிக்கு அபிஷேகம் பூசை திருவிழா என்பவற்றுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 நாட்கள் நடைபெற்று இம் மாதம் 14ம் திகதி முடிவுறும். (மா)

## புதிய அதிபர்

(மண்டைதீவு)
மண்டைதீவு மகாவித்தியாலய அதிபராக திரு. என். நடேசபிள்ளை நியமனம் பெற்றுள்ளார். மண்டைதீவு மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. சு. சண்முகநாதன் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய அதிபராக நியமனம்பெற்றதையடுத்து திரு. நடேசபிள்ளை மண்டைதீவுக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## உடுவில் உ. அ. அதிபர்
# கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்க நடவடிக்கை

[உடுவில்]
"கால்நடைகள்" பால் உற்பத்தி பால்விற்பனை சம்பந்தமான ஆலோசனைகள் எமது பிரதேசங்களில் இதுவரை காலமும் சரியான முறையில் ஆராயப்பட்டு அவற்றுக்கான நிரந்தரத்தீர்வுகள்மேற்கொள்ளப்படவில்லை. இதுபோன்ற அமைப்புக்கள் சகல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு நிரந்தரமான வலுவானஅமைப்புக்களாகி வளர்ந்து கால்நடை வளர்ப்போருக்கு ஒத்தாசை புரியவேண்டும்"

இவ்வாறு வலிகாமம்தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர்சங்க சுன்னாகக் கிளையினரின் ஆதரவில் கால்நடைவைத்தியர் ஒருவரை உடுவில் உதவி அரச அதிபர் காரியாலயத்தில் வைத்து ஆலோசனைகள், வைத்திய உதவிகள்செய்வதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில் திரு மகாலிங்கம் உரையாற்றினார்.

சுன்னாகம் கிளைத்தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் உடுவில்உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

கால்நடை வளர்ப்போர், கிராமசேவையாளர்கள்,உத்தியோகத்தர்கள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

புதன்கிழமைதோறும்இப் பகுதிக்கான கால்நடைகள் சம்பந்தமாக இலவச ஆலோசனைகளை உதவிஅரசஅதிபர் காரியாலயத்தில் வைத்து யாழ் அரச கால்நடை வைத்தியர் டாக்டர் தி. வருணலிங்கம் மேற்கொள்வதற்கேற்ற ஒழுங்குகளை சுன்னாகம் கிளைத் தலைவர் செய்துகொடுத்துள்ளார்.

அரசகால்நடை வைத்தியர் டாக்டர் தி. வருணலிங்கம் கால்நடைவளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளைச் செயலாளர் திரு. க. செல்வக்குமாரன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். [மா]

## பிரஜைகள் குழு ஏற்பாடு

[பலாலி]
தெல்லிப்பழை தென்மேற்கு பிரஜைகள்குழு அப்பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்த மக்களின் விபரங்களை திரட்டிவருகிறது.

இராணுவ நடவடிக்கையால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட கருகம்பனை கிராமம் அமைந்துள்ள பகுதியும் இப்பகுதியில் அடங்கிஉள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள்தமது பாதிப்புக்களை பகல்நேரத்தில் மட்டுமல்ல இரவுநேரத்திலும் தொடர்புகொண்டு எடுத்துக்கூற ஏற்பாடு செயப்பட்டுள்ளது.

## 500 குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

மாவிட்டபுரம் வியா
ஊரடங்கு அறிவித்தலையடுத்து வீடுகளை விட்டு வெளியேறிய பழை வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த 500க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை அரச நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை.

பழை வீமன்காமம் கிராம சேவகர் பிரிவிலிருந்து கடந்த 7ம் திகதிக்கு முன்பு வீடுகளை விட்டு இடம்பெயர்ந்த 600 குடும்பங்களுக்கு அரச நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது ஆனால் 7ம் திகதிக்குப் பின்பு வீடுகளை விட்டு திடீரென வெளியேறிய 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை அரச நிவாரண உதவிகள் எதையும் பெறவில்லை என கூறப்படுகிறது.

## வருடாந்தக் கூட்டம்

மண்டைதீவு,வியா
வேலணை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாற்சர சண்முகதாஸ் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் தலைவராக திரு மாணிக்கவாசரும், செயலாளராக திரு. கே பத்மநாதனும், பொருளாளராக இ. சற்குணநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# லண்டனிலிருந்து வந்த நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வெள்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், லண்டனிலுள்ள றன்பேர்லி நூல்நிலையத்திலிருந்து பயன்தரும் அறிவு நூல்களைப் பெற்று யாழ் பல்கலைக் கழகம்,கல்லூரிகள், பொது நூல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு வழங்கி வருகிறது.

1986ம் ஆண்டுக்கான நூல்கள் சென்றவாரம் கிடைக்கப் பெற்று பின்வரும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

இளவாலை கொன்வென்ற் மகாவித்தியாலம் 250, உடுவில் மகளிர் கல்லூரி 200, யாழ் இந்து மகளிர் கல்லூரி 150, இராமநாதன் கல்லூரி 150 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 150, நவாலி மகாவித்தியாலயம் 125, கொக்குவில் இந்துக் கல்லூரி 100, ஸ்கந்தவரோதயா கல்லூரி 100, பரி. ஹென்றிஸ் கல்லூரி 50 யாழ் பலகலைக் கழக மருத்துவபீடம் 22.

இந்நூல்களில் சிறுவர் நூல்கள் விஞ்ஞான நூல்கள் சிறுவர்களுக்கான பெரிய எழுத்து நூல்கள் சட்ட வைத்திய நூல்கள் கதைப்புத்தகங்கள் பொது நூல்கள் ஆகியவற்றுடன் கலைக் களஞ்சியத்தின் 30 கோவைகளும் சிறுவர் கலைக் களஞ்சியத்தின் 20 கோவைகளும் அடங்கியுள்ளன. இவற்றுள் சட்ட நூல்களும் கலைக்களஞ்சிய நூல்களும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க சுந்தரலிங்கம் ஞாபகார்த்த நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன

1987ம் ஆண்டுக்கான நூல்களை மூன்று மாதத்திற்குள் பெற்றுவிடலாமென்றும் அவற்றைத் தேவைப்படும் பாடசாலைகள், பொதுநூல் நிலையங்கள் ஆகியவற்றைத் தம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் கேட்டுள்ளார். அதேசமயம் கனடாவிலிருந்தும் நூல்களைத் தருவிக்கத் தான்நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் [மா]

# தெல்லிப்பழையில் தபால்விநியோகம் பாதிப்பு

பலாலி, வியா
தெல்லிப்பழை தபால் நிலையததில் பெருமளவு தபால்கள் தேங்கிக்கிடக்கின்றன.

இராணுவ அச்சுறுத்தலை அடுத்து தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில்இயங்கிவந்த தபால் நிலையம் தற்பொழுது துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அருகே இயங்கி வருகிறது.

தபால் பகுதியினர் கட்டுவன், வறுத்தலைவிளான், குரும்பசிட்டி,கொல்லங்கலட்டி போன்ற இடங்களுக்கான தபால் விநியோகத்தை செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு ஊழியர் செல்ல முடியாத நிலையும், வீடுகளில் உரிமையாளர்கள் இல்லாத நிலையுமே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது

அத்துடன் தெளிவாக முகவரி இல்லாத கடிதங்களும் சில கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## இ. க. கட்சியின் 44–வது ஆண்டு பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 44வது ஆண்டுப்பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறுகாலை யாழ். பலாலி வீதியிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட பதில் செயலாளர் திரு. க. நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இப் பொதுக்கூட்டத்தில் திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், ஐ ஆர். அரியரத்தினம், டொமினிக் ஜீவா, க. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றுவார்கள். (மா)

## தரைமட்டமான வீட்டில் பொருள்களை தேடிஎடுத்தனர்

மாவிட்டபுரம், வியா
தரைமட்டமாகி இருந்த வீட்டினுள் வீட்டுச் சொந்தக்காரர் தமது வீட்டுப் பொருட்களை தேடி எடுத்த சம்பவம் மாவிட்டபுரத்தில் நடந்துள்ளது.

மாவிட்டபுரம் பிரதான வீதியிலுள்ள எம். துரைராஜா என்பவரது வீடு தரைமட்டமாகி இருந்தது.

அவரும், அவரது மனைவியும் இடிபாடுகளுக்குள் கிடந்த தமது வீட்டுப் பொருட்கள் கிலவற்றை தேடி எடுப்பதில் ஈடுபட்டிருந்தனர். இதனை பார்வையிட்ட பொதுமக்கள் யாவரும் மனமுருகி அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

## மின்சார விநியோகம் இல்லை

[அச்சுவேலி நிருபர்]
சுன்னாகம் பூதராயர் கோவில வீதிக்கு மின்னிணைப்புச் செய்யப்பட்ட போதிலும் அந்தப்பகுதி பாவனையாளர்களுக்கு மின்சார விநியோகம் செய்யப்படவில்லை.

சுன்னாகம் தெற்கு பூதராயர் கோவில் வீதிக்கு மின் இணைப்பு செய்வது என்ற திட்டத்தின் கீழ் கடந்த ஒருவருடத்திற்கு முன்பு மின்கம்பங்கள் சிரமதான அடிப்படையில் நிறுத்தப்பட்டன,

இந்தவருடத் தொடக்கத்தில் மின்வயாகள் இணைப்புச் செய்யப்பட்ட போதிலும் அந்த வீதியில் இருக்கும் பாவனையாளர்களின் வீடுகளுக்கு மின்சார விநியோகம் செய்யப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

## ஊக்குவிப்பு நன்கொடை

[கிளிநொச்சி நிருபர்]
கிளிநொச்சி கணேசபுரம் கிராம முன்னேற்ற சங்கத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி பயின்று 1987ம் ஆண்டு பல்கலைக் கழக அனுமதி பெறும் கணேசபுரம் பகுதி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு நன்கொடையாக வழங்கவுள்ளனர்.

# "பொறுக்காவிலிருந்து" இன்று நிவாரணப்பொருள்கள் இறக்கப்படும்

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 3-7-87

(அலுவலக நிருபர்)

இந்திய நிவாரணப் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள "பொறுக்கா-2" என்னும் கப்பலில் இருந்து இன்று உணவுப் பொருட்கள் இறக்கப்படுமென இந்தியத் தூதரக பாதுகாப்பு அதிகாரி காப்டன் குப்தா தெரிவித்தார்.

இந்திய தூதரக பாதுகாப்பு அதிகாரி காப்டன் குப்தா காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டல் இராணுவமுகாம் உயரதிகாரிகளுடன் நேற்று தொடர்பு கொண்ட பின்பே இன்று இந்திய கப்பலிலிருந்து உணவுப் பொருட்கள் இறக்கப்படுவதற்கு இராணுவத்தினர் சம்மதித்துள்ளனர்.

கடந்த மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை இந்தக் கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடைந்த போதும் இலங்கைக் கப்பலில் இருந்து இராணுவத் தளபாடங்கள் இறக்கப்பட்டமையால் உணவுப் பொருள்கள் இறக்கப்படாமல் துறைமுகத்திலிருந்து மூன்று மைல்களுக் கப்பால் நங்கூரமிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை 7 மணிக்குத் துறைமுகத்தை வந்தடையவிருக்கும் இக்கப்பலில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஸ். பற்குணம் செய்துள்ளார்.

### கப்பலில் வந்துள்ள உணவுப் பொருள்கள் விபரம்

250 தொன் அரிசி, 130 தொன் கோதுமை மா, 140 தொன் சர்க்கரை, 40 தொன் பருப்பு, பால்மா வகைகள்' 1 தொன் புளி, 11/2 தொன் மல்லி, 15 தொன் சமையல் எண்ணெ, 100 பீப்பா பண்ணெண்ணெ 20 ஆயிரம் டசின் தீப்பெட்டி.

இந்த உணவுக் கப்பலில் இந்திய உணவுக் கூட்டுத்தாபன துணைக்கமிஷனர் திரு. எம்.டி. சக்ஸேனுவும் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வா)

## அதிபர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றும் சகல மாணவர்களும் இன்று காலை தத்தம் பாடசாலை அதிபர்களைச் சந்திக்குமாறு, சகல பாடசாலை அதிபர்களும் கூட்டாகக் கோரியுள்ளனர். [கை]

## ஆஸ்பத்திரி கட்டட வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி.

எரிபொருள் தடையின் காரணமாக கடந்த நான்கு மாதங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ் போதனு வைத்தியசாலையின் மூன்றுகோடி ரூபா செலவிலான ஐந்துமாடிக் கட்டிட வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் சு. சிவதாசன் தெரிவித்தார்

இவ்வேலையை பொறுப்பேற்றுச்செய்யும் சமக்கோன் கட்டிட நிர்மான நிறுவனம் இவ்வேலை உடனடியாக தொடர்ந்துசெய்ய பணிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அமைச்சர் அத்துலத்முதலி நாடு திரும்பினர்

[கொழும்பு]

தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி இருவார வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினர்

கடந்த மாதம் 15ம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேட செய்தி ஒன்றுடன் பாகிஸ்தானுக்கு திடீர்விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அத்துலத் முதலி அங்கிருந்துவியட்னுமுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றிருந்தார்.

திரு. அத்துலத் முதலியின் அமெரிக்க சுற்றுப் பயணத்தில் அவரால் அமெரிக்க அரசு அதிகாரிகள்எவருடனும்தொடர்பு கொள்ளமுடியாத போதும், 'தமிழ்ப் போராளிகளுக்கெதிரான' பிரசாரவேலையில் அங்கு ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [சி]

## "பரீட்சைகளை — பகிஷ்கரிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யவும்"

**— மாணவர், இளைஞர் பொதுமன்றம்**

யாழ்ப்பாணம், வெள்ளி.

"இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்ட வடக்குக்-கிழக்கு மாணவர்களின் ஆறு கோரிக்கைகளை முன்வைத்து மாணவ முன்னணி நடத்தும் போராட்டத்தை ஆதரிக்கும் அதே வேளையில் பரீட்சைகளை பகிஸ்கரிப்பதென்பதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேம்.

இவ்வாறு மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

"இதற்கு மாற்றீடாக பரீட்சைகளைப் பின்போடும்படி அனைத்து பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் ஒன்றுசேர்ந்து போராடும்படியும் வேண்டுகிறேம்.

"வடக்கு,கிழக்குமலையக பகுதிகளில் வாழும் தமிழ்பேசும் மாணவர்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். சிங்கள இனவெறி அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள்காரணமாக எதிர்கால சந்ததி கல்வியை இழந்து வருகிறது இதனல் சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய புத்திஜீவிகளை எதிர்காலத்தில் இழக்க நேரிடும்." [ஒ]

## இருபாலையில் சர்வமதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், வெள்ளி

மனித அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் ஈழப் போராளிகளின் வலிமையைக் காக்கவும் வேண்டி நாளை சனிக்கிழமை இருபாலை மகாவித்தியாலயத்தில் சர்வமதப் பிரார்த்தனையொன்று நடைபெறவுள்ளது

மாதந்தோறும் முதல் வரும் சனிக்கிழமைகளில் நடத்தப்படும் இப்பிரார்த்தனையை இருபாலையிலுள்ள மதஸ்தாபனங்கள், பொது அமைப்புக்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் இணைந்து நடத்துகின்றன. [ஒ]

## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

(கொழும்பு)

முன்னுள் மேல் நீதிமன்ற நீதிபதி கி. பாலகிட்ணர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுளளார். கடந்த செவ்வாய்க்கிழமை ஜனுதிபதி முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மட்டக்களப்பு- திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. கி. பாலகிட்ணர் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, கொழும்பு சென். ஜோசப் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

இடம்: தாவடி இல்லம்
தகனம்: தாவடி மயானம்
காலம்: 3-7-87 காலை 10-00 மணி வெள்ளிக்கிழமை

**பிள்ளைகள்**

பொன்னுத்துரை நடராஜா
பொன்னுத்துரை மதிமுகராஜா
[தலைவர் வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கம்] (சி-9677)

### திரு. அம்பலவாணர் குணரத்தினம்

திரு. அம்பலவாணர் குணரத்தினம் (இளைப்பாறிய தபால் அதிபர்) காலமானுர் இவர் காலஞ்சென்ற புஷ்பமணியின் அன்புக் கணவரும் சுவினிதா, வினிதா (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும் கிருபானந்தராஜா (கனடா) அவர்களின் அன்பு மாமனும் காலஞ்சென்ற நவரத்தினம், (புகையிரதநிலைய அதிபர்) செல்வரத்தினம் (இளைப்பாறிய தபால் இலாகா உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் அவரின் உருப்பராய் கேணியடி இல்லத்திலிருந்து இன்று வெள்ளிக்கிழமை 3-7-87 பிற்பகல் 3 மணியளவில் நல்லடக்கத்திற்கு கோப்பாய் கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. நடராசா.

(சி 9675)

### திரு. இரத்தினம் விஸ்வநாதன்



தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற யூனியன்கல்லூரி பதில் அதிபரும், முன்னைநாள் யாழ்.மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளரும் ஆகிய இரத்தினம் விஸ்வநாதன் அவர்களின் ஈமக்கிரியைகள் 03-07-87 வெள்ளிக்கிழமை (இன்று) பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

கம்பனை,
தெல்லிப்பழை.
[சி-9671]

### திரு. பெருமாள் சுவாமிநாதன்

கரம்பொனைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய பெருமாள் சுவாமிநாதன் 29-6-87 அன்று காலமானுர். அன்னர் பாக்கியலெட்சுமியின் அன்புக்கணவரும், சந்திரசேகரன் (பிரான்ஸ்), திருமதி லோகநாயகி சிவலிங்கம் (ஜேர்மனி),கருணேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவலிங்கம் ஜேர்மனி) அவர்களின் அருமை மாமனுரும், சுபோதினி, சுதாசினி, சுகிர்தன், சுசனி, ஸ்ரீபாணி ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான சாமி கந்தையா, திருமதி நாகம்மா வல்லிபுரம், திருமதி அன்னபமா கந்தையா, திருமதி சிவக்கொழுந்து அப்பாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 30-6-87இல் அவரது இல்லத்தில் நடைபெற்று சுருவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பாக்கியலட்சுமி சுவாமிநாதன்
சுருவில். (சி 9670)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் மார்க்கண்டு
(இளைப்பாறிய தொலைபேசி இயக்குநர்)

கொட்டடி வாசியும் தற்போது கொக்குவிலில் வசிப்பவருமாகிய திருமதி அன்னபூரணம் காலமாகிவிட்டார். இவர் மார்க்கண்டுவின் (முன்னைநாள் சரவணை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், குத்தகைக்காரர்) அன்பு மனைவியும், வனஜா (தொலைதொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவகுமார் (யாழ். மத்திய கல்லூரி), பிறேமளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நஞ்சிதமலரின் (லேடன் தொழிற்சாலை) சிறிய தாயாருமாவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (04-07-87) பிறபகல் 3-00 மணிக்கு நடைபெற்று, தகனம் கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
கொக்குவில். [சி-9678]

### வைத்திலிங்கம் உலகநாதன்

வைத்திலிங்கம் உலகநாதன் (C. T B காரைநகர்) அன்னர் ஜென்ரிமலரின் அன்புக் கணவரும், கிருசாந்தனின் அனபுத் தந்தையும், வீமன்காமம் வடக்கு வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், அழகரத்தினம் (C. T. B. மன்ஞர்), நாகேந்திரம் (லங்கா சிமந்து லிமிட்டட், சக்திவேல், சிறீதரன், நகுலேஸ்வரி, கமலசிறீதேவி, இராஜேஸ்வரி, சந்திரகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாகாதனை தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா அன்னம் தம்பதிகளின் மருமகனும், திருநாவுக்கரசு (டோவா), ஜெயலக்ஷ்மி, ஜெகதீஸ்வரி, திருக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 03-07-87 (இன்று) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு அன்னரின் தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெற்று கட்டுப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேம். [சி-9679]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.